வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் ("கம்பனி") 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தமும் உரிய நேரத்திலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தாமாக வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், சட்ட விதிகளின் மூலம் காட்டப்படக் கூடியவாறான காலப்பகுதிக்குள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரங்களுக்குள் தயாரித்தல் இடம்பெறுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையான நான்கு ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கையும் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

(i) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் ஆறு மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் அவற்றின் தயாரிப்பிற்கு பொறுப்பான நபரினால் சான்றுறுதிப்படுத்தப்படுவதை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டும்.

## 2.1 தீர்க்கப்படாத கணக்காய்வுப்பந்திகள்

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. மீளாய்வாண்டிற்கான நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் நடவடிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 யூலை 01 ஆந் திகதிய பீஈ/ஜிஓசீஓ/ரீஆர்9 ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் ஒரு ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த தகுதி வாய்ந்த அதிகாரி மீளாய்வாண்டின்போது உரிய நியமனம் நீடிக்கப்படாது மற்றும் செய்ய வேண்டிய கடமைகள் குறித்து எழுத்து மூலமான கடமைப்பகிர்ந்தளிப்பு ஒன்று இல்லாமல் செயற்பட்டிருந்தார். | தகுதி வாய்ந்த அதிகாரியின் நியமனத்தை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தகுதி வாய்ந்த அதிகாரியின் ஓராண்டுக்காலம் காலாவதியானதால் அப்பதவியை வைத்திருப்பதை சட்டபூர்வமாக்குவதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேணடும் . |
| (ஆ) | இறப்பரினால் ஆக்கப்பட்ட முடிவுப்பொருட்களுக்கான உற்பத்தி தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 1999 ஆம் வருடத்தில் மற்றும் 2001 ஆம் வருடத்தில் திறைசேரியால் இக்கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த துணைக்கடன் தொகையில் 2019 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையில் ரூபா 773.34 மில்லியன் மற்றும் அத்தினத்தில் அட்டறு வட்டியாக ரூபா 612.80 அறவிடப்பட உள்ளதாக திறைசேரிச் செயற்பாட்டுப்பணிப்பாளர் நாயகத்தினால் 2019 ஒக்டோபர் 07 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே அக்கடன் தொகையைத் தீர்ப்பதற்கு எல்பிட்டிய ∴போம் இறப்பர் தொழிற்சாலையைப் பொருத்தமான முதலீட்டாளருக்கு கத்தகைக்கு விடவும் அதன் இயந்திரங்களை விங்பனை செய்வதற்கும் திறைசேரிச் செயற்பாட்டுப்பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கண்ட துணைக்கடனைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் பொருத்தமான முதலீட்டாளருக்கு குத்தகைக்கு விடுவதற்கு அமைச்சரவைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டாளரினால் மதிப்பீட்டறீக்கை கட்டிடத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. இயந்திரங்களுக்கான மதிப்பீட்டறிக்கை வழங்கப்பட முடியாதென தெரிவிக்கப்பட்டது. எனினும் அந்த மதிப்பீட்டறிக்கையைக் குழுவொன்றின் முலம் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது கிடைத்ததும் விலைமனுக்கோரல் நடைமுறைக்கேற்ப இயந்திரங்கள் விற்கப்பட்டு மற்றும் கட்டிடத்துடன் கூடிய நிலம் மதிப்பிடப்பட்ட தொகைக்கு காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு மீண்டும் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.. | |

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

2010 ஏப்ரல் 30 ஆம் திகதிய 1651/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனமானது அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 06 தொழிற்சாலைகளில் மாவனெல்ல கேந்திர நிலையம், மாவனெல்ல டயர் டியூப் மற்றும் பதுரலிய கிரேப் இறப்பர் ஆகிய தொழிற்சாலைகள் அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் மூலமும் மற்றும் வஹரக கிரேப் இறப்பர் தொழிற்சாலை வரையறுத்த இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் மூலமும் தனியார் துறைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் சில்வடெல் தொழிற்சாலையானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே எல்பிட்டிய தொழிற்சாலை 11 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவனல்ல கேந்திர நிலையம், மாவனல்ல டயர், டியூப் மற்றும் பதுரலிய கிறேப் இறப்பர் ஆகிய தொழிற்சாலைகளின் குத்தகை தொடர்பான குத்தகை ஒப்பந்தங்களின் குத்தகை நிபந்தனை இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் குத்தகைக் காலத்தின் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் குத்தகைத் தவணை நுற்றுக்கு 50 வீதத்தால் அதிகரிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் முதல் ஐந்தாண்டுகள் 2017 மார்ச் 12 ஆந் திகதி முடிவடைந்த போதிலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகைத் தவணையை அதிகரிக்காமையால் 2020 மார்ச் 31 ஆந் திகதியில் 36 மாதங்கள் 19 நாட்களுக்காக அம் மூன்று தொழிற்சாலைகளில் ரூபா 11,033,847 ஆன குறைவான குத்தகைக் கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலுவை குத்தகைக் கட்டணத்தை அறவிடுவதற்காக அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதனால் இந் நிறுவனத்திற்கு இது தொடர்பாக தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) "அரோமா" எனும் தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த மாவனல்லயில் அமைந்துள்ள கேந்திர நிலையம் / புளொக் இறப்பர் தொழிற்சாலையின் குத்தகை ஒப்பந்தத்தின் 5 ஆவது பிரிவில் குத்தகைதாரரின் (xi) ஆம் நிபந்தனையின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் பிற நிரந்தர கட்டுமானங்கள் உள்ளிட்ட அனைத்து அபாயங்களும் குத்தகைதாரரினால் காப்புறுதி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் மற்றும் சொத்துக்களை முறையாகப் பராமரிக்காத காரணத்தினால். | | |
| (i) மேற்கூறிய தொழிற்சாலையின் பிரதான கட்டிடத்தின் கூரை இடிந்து விழுந்து இற்றை வரையில் 02 வருடங்களுக்கும் அதிக காலமாகியும் அக்கூரை மீண்டும் மறுசீரமைப்பு செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கோகாலை மாவட்ட செயலாளரிடமிருந்து செலவு மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட | குத்தகை ஒப்பந்தத்தின் படி தொழிற்சாலையின் கூரையை மறுசீரமைப்பு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | போதிலும் மதிப்பீட்டுப் பெறுமதி உயர்வாக இருந்தமையால் 2020 ஆம் வருடத்தில் அதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு முடியவில்லை. | உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கட்டிடத்தின் கூரை இடிந்து விழுந்தமை குறித்து முழுமையான விசாரணையொன்று மேற்கொள்ளப்படவில்லை. | முழுமையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நட்டங்களுக்கான முழுமையான விசாரணையொன்று நடாத்தப்படல் வேண்டும். |
| (iii) | கூரை இடிந்து விழுந்த 2018 யூலையிலிருந்து 2020 மார்ச் 31 ஆந் திகதி வரையில் இத் தொழிற்சாலையிலிருந்து அறவிட வேணடிய ரூபா 13,856,787 ஆன (ரூபா 659,847*21மாதங்கள்) குத்தகைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு அரச வளங்கள் முகாதைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகை கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகள் குத்தகைக்கு விடப்பட்ட நேரத்தில் குத்தகைக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந் நேரத்தில் காணப்பட்ட சொத்துக்கள் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விட்ட நேரத்தில் அனைத்து சொத்து அறிக்கைகளும் உங்களுக்கு வழங்கப்பட்டதாக தகுதி வாய்ந்த அதிகாரியினால் அறிக்கையிடப்பட்டுள்ளது . | நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |